தனம் தலைமை நீதிமன்றம் / நிரப்பு நீதிபதி அவர்கள் முன்பாக

# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8319481

1. District : இராமநாதபுரம் PS: ஊ.து.க மரைவு Year: 2025 FIR No.: 12/2025 Date: 19.06.2025
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: உழவர் நலப்பு நிருத்தச்சட்டம் 2018 Sections பிரிவுகள்: 15 r/w 13 (1) (a) r/w

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்: 13(2) of PC Amendment

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்: Act 2018

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 31.07.2022 Date to : மதியம் சுமார் 02.45 மணிமுதல்
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை

Time Period : Time from : 01.08.2022 Time to : மாலை சுமார் 05.00 மணிவரை
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : 19.06.2025 Time : 14.00 மணி
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

(c) General Diary Reference : Entry No(s) Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் தொகுதி-I நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் முதற்கட்ட விசாரணை அறிக்கையில் (PE 95/2022/RDP/RM)

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : (b) Address : போகலூர் ஊராட்சி ஒன்றிய
முறைக் காவல் எண் முகவரி அலுவலக வளாகம்.
சுமார் 1 கி.மீ தொலைவு

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : மு.தமிழரசன் (b) Father's/ Husband's Name : முத்துப்பாண்டி
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : (d) Nationality : இந்தியர் (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு 20/8/1975 நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : (g) Address :
தொழில் காவல் ஆய்வாளர் முகவரி உழவர் நலப்பு மற்றும் கண்காணிப்புப்பரிவு, இராமநாதபுரம் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு.P. இராஜேந்திரன், பணி மேற்பார்வையாளர், போகலூர் ஊராட்சி ஒன்றியம் இராமநாதபுரம் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு : —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) —

**பணிந்து சமர்ப்பிக்கிறேன்: இயக்குநர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அவர்களின் 17.11.2022 நாளிட்ட குறிப்பாணையின்படி குற்ற அலுவலர் மீது PE 95/2022/RDP/RM பதிவு செய்யப்பட்ட முதற்கட்ட விசாரணையின் தொடர்ச்சியாக, இயக்குநர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அவர்களின் 08.04.2025 நாளிட்ட குறிப்பாணையின்படி மேற்படி எதிரி மீது குற்ற எண்.12/2025 ஊழல் தடுப்பு திருத்தச்சட்டம் 2018 சட்டப்பிரிவுகள் 15 உ/இ 13 (1) (a) உ/இ 13 (2) ன்படி கீழ்கண்ட குற்றச்சாட்டு தொடர்பாக 19.06.2025ம் தேதி 14.00 மணிக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். எதிரி திரு.P.இராஜேந்திரன் என்பவர் கடந்த 15.07.2021 முதல் தற்போது வரை போகலூர் ஊராட்சி ஒன்றியத்தின் பணி மேற்பார்வையாளராக பணிபுரிந்து வருகிறார். எனவே மேற்படி எதிரி ஊழல் தடுப்பு திருத்தச்சட்டம், 2018 ச/பி 2 (c)–யின்படி பொது ஊழியர் ஆவார்.**

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் N.ராஜசேகரன் ..... பதவி காவல் ஆய்வாளர் ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

19.06.2025

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer-in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

19.06.2025 – 15.00 மணி

Name: பெயர் (தி) மகேசன்
Rank: நிலை .....No. எண் .....
காவல் ஆய்வாளர்
உ.தி.க. பிரிவு
இராமநாதபுரம்

இராமநாதபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு குற்ற எண்.12/2025 ச/பி 15 உ/இ 13 (1) (a) உ/இ 13 (2) ஊழல் தடுப்பு திருத்தச்சட்டம் 2018 வழக்கின் தொடர்ச்சி :–

இராமநாதபுரம் மாவட்டம், போகலூர் ஊராட்சி ஒன்றிய திட்ட பணிகளுக்கென அரசால் வழங்கப்படும் இரும்பு கம்பிகள், சிமெண்ட் மூடைகள் மற்றும் தார் போன்றவைகளுக்கு முறையே Steel Stock Register, Cement Stock Register and Bituminous Stock Register ஆகிய பதிவேடுகள் பராமரிக்கப்படுகிறது. அந்த பதிவேடுகள் 2015 வரை உதவி பொறியாளர் மூலம் பராமரிக்கப்பட்டு வந்தது. அதன் பிறகு கடந்த 2016 ஆம் ஆண்டில் திரு.நடராஜன், இ.ஆ.ப மாவட்ட ஆட்சியர் அவர்களால் பண்டக சாலை பொறுப்பு அனைத்தும் பணி மேற்பார்வையாளர் வசம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்று ந,க,வ4/14421/2016 பிரகாரம் கடந்த 22.03.2016 ஆம் தேதி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. அதன்படி கடந்த 15.07.2021ம் தேதி முதல் போகலூர் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் பணி மேற்பார்வையாளராக பணிபுரியும் எதிரி திரு.இராஜேந்திரன் என்பவர் வசம் மேற்படி பண்டகசாலை பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஒன்றியத்திற்குட்பட்ட ஊராட்சிகளில் மேற்கொள்ளப்படும் அரசு திட்ட பணிகளுக்கு ஆணை பிறப்பிக்கும் போதே அதை செயல்படுத்த வேண்டிய அதிகாரியையும் நியமிக்கப்படும். மேற்படி பணிகளுக்கு தேவைப்படும் கம்பிகள் மற்றும் சிமெண்ட் மூடைகள் ஆகியவற்றை குறித்து உதவி பொறியாளர் அல்லது பணி மேற்பார்வையாளர் கொடுக்கும் விண்ணப்பத்தை வைத்து பொருட்கள் கேட்கப்படும். பின்னர் பயனாளிகளுக்கு வழங்கப்படும் பொருட்களுக்கு பெர்மிட் ஆர்டரில் சம்மந்தப்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலர் கையெழுத்திட்ட பின்பு தான் உதவி பொறியாளர் அல்லது பணி மேற்பார்வையாளர் பொருட்களை விநியோகிக்க வேண்டும். ஆனால் 31.07.2022ம் தேதி பண்டக சாலை பொறுப்பிலிருந்த எதிரி திரு.இராஜேந்திரன் பணி மேற்பார்வையாளர் என்பவர் அப்போதைய வட்டார ஊராட்சியின் வட்டார வளர்ச்சி அலுவலர் திருமதி.செல்லம்மாள், என்பவரிடமும், கிராம ஊராட்சியின் வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.நடராஜன் என்பவரிடமும் தெரிவிக்காமலும், Permit Order பெறாமலும் தன்னிச்சையாக போகலூர் வட்டார வளர்ச்சி அலுவலக வளாகத்திலிருந்து கட்டுமான பணிக்காக வைக்கப்பட்டிருந்த சுமார் ரூ.43,700/– மதிப்புள்ள 2300 கிலோ எடையுள்ள இரும்பு கம்பிகளை நாகர்ஜூன், காண்டிராக்டர், சக்ரா பில்டர்ஸ் என்பவருக்கு விலைக்கு விற்பதற்கு பேசியுள்ளார். அதன்படி கம்பிகளை ஏற்றுவதற்கு பழனியம்மாள் ஸ்டீல்ஸ் நடத்தி வரும் ஜெயம்பாண்டியன் என்பவரிடம் நாகர்ஜூன் வண்டி மற்றும் ஆட்களை கேட்டதின் பேரில் ஜெயபாண்டியன்

கடந்த 31.07.2022ஆம் தேதி தனது கம்பெனியிலுள்ள TN 65 BX 4502 "தோஸ்த்" சிறிய ரக சரக்கு வாகனத்தையும் வேலையாட்கள் திரு.தீபக் மற்றும் திரு.விஜய் ஆகியோரை கொடுத்து திரு.நாகர்ஜுன் கேட்டபடி 2 இரும்பு டிராலிகளையும் ஏற்றிவிட்டுள்ளார். மேற்படி பணிக்கு விஜய் அவரது உறவினர் திரு.மணிமுத்து என்பவரையும் அழைத்து சென்றுள்ளார். பின்னர் 31.07.2022 ம் தேதி பிற்பகல் 01,30 மணிக்கு தீபக் மேற்படி வாகனத்தை ஓட்டிக்கொண்டு விஜய் மற்றும் மணிமுத்துவுடன் போகலூர் வட்டார வளர்ச்சி அலுவலக வளாகத்திற்குள் சென்ற போது ஏற்கனவே அங்கு நின்று கொண்டிருந்த நாகர்ஜுன் மேற்படி வேலையாட்களை பணி மேற்பார்வையாளர் இராஜேந்திரனுக்கு அறிமுகம் செய்து வைத்துள்ளார். பின்னர் பணி மேற்பார்வையாளர் இராஜேந்திரன் காட்டிய போகலூர் வட்டார வளர்ச்சி அலுவலக வளாகத்தில் கிடந்த ஒரு பகுதி இரும்பு கம்பிகளை மேற்படி வாகனத்தில் ஏற்றி கொண்டு சென்றுள்ளார்கள். அப்போது அன்றைய தினம் போகலூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் Turn Duty பணியாக அலுவலக உதவியாளர் திருமதி.பரிமளம் மற்றும் மேற்படி அலுவலகத்தின் இரவு காவலாளியான திரு.கண்ணையா ஆகியோர் மேற்படி கம்பிகளை வாகனத்தில் ஏற்றியதையும், அந்த இடத்தில் பணி மேற்பார்வையாளர் திரு.இராஜேந்திரன் இருந்துள்ளதையும் பார்த்துள்ளார்கள். Turn Duty பணியிலிருந்த திருமதி.பரிமளம் என்பவர் பணி மேற்பார்வையாளர் திரு.இராஜேந்திரனிடம் கம்பிகள் ஏற்றுவது குறித்து கேட்டதற்கு பணி மேற்பார்வையாளர் திரு.இராஜேந்திரன் கம்பிகளை இடம் மாற்றுவதாக கூறியுள்ளார். பின்னர் நாகர்ஜுன் சொன்னபடி அச்சுந்தன்வயல் சைட்டிற்கு செல்வதற்கு முன்பு இராமநாதபுரம் மதுரை மெயின் ரோட்டில் உள்ள ஸ்ரீநிவாசா காம் வெயிட்பிரிட்ஜில் எடை போடுவதற்கு சென்ற போது அச்சுந்தன்வயல் செக்போஸ்ட்டில் வாகன தணிக்கையிலிருந்த திரு.கஜேந்திரன், சிறப்பு சார்பு ஆய்வாளர் மற்றும் திரு.மங்களசாமி, தலைமை காவலர், B1 நகர் காவல் நிலையம் ஆகியோர் மேற்படி வாகனத்தை நிறுத்தி கம்பிகளுக்குண்டான பில்லை ஓட்டுனர் தீபக்கிடம் கேட்டுள்ளனர். அப்போது அங்கு சென்ற நாகர்ஜுன் இந்த கம்பிகள் போகலூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் கிடப்பில் இருந்த பழைய கம்பிகள் என்றும் மேற்படி அலுவலகத்தில் பணியாற்றும் பணி மேற்பார்வையாளர் திரு.இராஜேந்திரன் என்பவர் இக்கம்பிகளை தன்னிடம் விலைக்கு எடுத்துக்கொள்ள கூறியதின் பேரில் இக்கம்பிகளை எடை போடுவதற்காக எடுத்து வந்ததாகவும், எடை போட்ட பின்பு தான் இதற்கான ஆவணங்கள் கிடைக்கப்பெறும் என்றும் தனக்கு கிடைக்க பெற்றவுடன் சமர்பிக்கிறேன் என்றும் கூறியுள்ளார். பின்னர் ஓட்டுநர் தீபக் மேற்படி கம்பிகளை வாகனத்துடன் மேற்படி வெயிட் பிரிட்ஜில்

எடை போட்டதில் வண்டியுடன் மொத்த எடை 4540 கிலோ என்று Srinivasa Com Weight Bridge என்ற நிறுவனத்தால் பில் வழங்கப்பட்டுள்ளது. விசாரணையில் ஜெயபாண்டியன், பழநியம்மாள் ஸ்டீல்ஸ் உரிமையாளர் என்பவர் தனது வாகனத்தின் எடை 2130 கிலோ எனவும், 2 டிராலிகளும் சுமார் 110 கிலோ எடை எனவும் கூறியுள்ளார். மேற்படி ஓட்டுநர் தீபக் கம்பிகளை எடைபோட்டு விட்டு பின்னர் அச்சுந்தன்வயல் சைட்டிற்கு சென்று கம்பிகளையும், 2 டிராலிகளையும் இறக்கியவுடன் இன்ஜினியர் திரு.நகார்ஜீன் வண்டியை அனுப்பியுள்ளார். பின்னர் இன்ஜினியர் திரு.நகார்ஜீன் பணி மேற்பார்வையாளர் திரு.இராஜேந்திணிடம் கம்பிக்கான பில் கேட்டும் கொடுக்காததால் இதில் ஏதோ பிரச்சினை இருப்பதாக கருதி பணி மேற்பார்வையாளர் இராஜேந்திரனிடம் தெரிவித்துவிட்டு 01.08.2022ம் தேதி அச்சுந்தன்வயல் சைட்டிலிருந்த கம்பிகளை திரு,தினேஷ் பாபு என்பவரது TN 65 AL 2706 எண் கொண்ட டிராக்ட்டரில் ஏற்றி மஞ்சூரில் உள்ள வீரபாண்டி எடை நிலையத்தில் எடை போட்டு விட்டு போகலூர் ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் கொண்டு இறக்குமாறு கூறி அனுப்பியுள்ளார். ஓட்டுநர் தினேஷ்பாபு வாகனத்துடன் கம்பிகளை எடை போட்டதில் First Weight 5330 கிலோ எனவும் Second Weight வண்டியின் எடை 3030 கிலோ எனவும் Third Weight கம்பியின் எடை 2300 கிலோ என குறிப்பிட்டு பில் வழங்கப்பட்டுள்ளது. பின்னர் ஓட்டுநர் தினேஷ்பாபு இன்ஜினியர் திரு.நகார்ஜீன் உத்தரவுப்படி 01.08.2022ம் தேதி மாலை சுமார் 05.00 மணிக்கு மேற்படி கம்பிகளை போகலூர் ஒன்றிய அலுவலக வளாகத்தில் இறக்கியுள்ளார். மேற்படி கம்பிகளை அலுவலக வளாகத்திலிருந்து வெளியே எடுத்துச்சென்றது, பின்னர் திரும்ப கொண்டு இறக்கிய சம்பவங்கள் அனைத்தும் போகலூர் ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் பொருத்தப்பட்டுள்ள CCTV கேமராவில் பதிவாகியுள்ளது. இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியரின் 22.03.2016 ஆம் தேதியிட்ட ந.க.வ4/14421/2016 செயல் ஆணையின்படி இருப்புகளை பராமரிப்பது மற்றும் விநியோகம் செய்வது போன்றவற்றிற்கு தனியர்களே பொறுப்பு என்றும், இது சம்பந்தமாக பதிவேடுகளை பராமரிப்பது மற்றும் பதிவுகளை இணையதளத்தில் பதிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும், கட்டுமான பொருட்கள் பெறப்பட்டவுடன் இருப்பு பதிவேடு மற்றும் இணையதளத்தில் உரிய பதிவுகள் மேற்கொள்ள வேண்டுமென்றும், வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் பொறியாளர்களின் முறையான அனுமதி பெற்ற பின்னரே பொருட்களை விநியோகம் செய்ய வேண்டுமென்றும், பொருட்களின் விநியோக ஆணையை பாதுகாப்பாக வைத்துக்கொள்ள வேண்டுமென்றும், விநியோகம் செய்யப்பட்டவுடன் அதனை

இணையதளம் மற்றும் இருப்பு பதிவேட்டில் பதிவுகள் மேற்கொள்ள வேண்டுமென்றும், விநியோகம் செய்யப்பட்டதற்கு பயனாளிகள் / ஒப்பந்ததாரர்களிடம் இருந்து ஒப்புகை பெற வேண்டுமென்றும், பொருட்கள் வாரியாக இருப்பு பதிவேடு, திட்டம் வாரியாக பொருட்கள் இருப்பு பதிவேடு பராமரிக்கப்பட வேண்டுமென்றும், இதனை முறையாக பதிவுகள் மேற்கொண்டு வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் பொறியாளர்களிடம் நாள்தோறும் கையொப்பம் பெற வேண்டுமென்றும், அவ்வாறு பராமரிக்கப்படும் பதிவேடுகளை உயர் அலுவலரிடம் கொடுத்து பெறுவதற்கு பணிப்பார்வையாளர் (பண்டகசாலை) களின் பொறுப்பாகும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் எதிரி திரு.இராஜேந்திரன் அரசுத்திட்ட பணிகளுக்காக வைக்கப்பட்டிருந்த இரும்பு கம்பிகளுக்கான இருப்பு பதிவேடுகளை பராமரிக்காமலும், உரிய அனுமதி ஆணை பெறாமலும் இன்ஜினியர் திரு.நாகர்ஜீன் என்பவரிடம் கையொப்பம் ஏதும் பெறாமல் அரசை ஏமாற்றும் நோக்கத்தோடு அரசுத்திட்ட பணிகளுக்காக வைக்கப்பட்டிருந்த சுமார் 2300 எடையுள்ள ரூ.43,700/– மதிப்புள்ள இரும்பு கம்பிகளை எதிரி திரு.இராஜேந்திரன். பணிமேற்பார்வையாளர் என்பவர் சுயலாபம் அடையும் நோக்கோடு கடந்த 31.07.2022 ம் தேதி மதியம் சுமார் 01.30 மணிக்கு இன்ஜினியர் நாகர்ஜுன் என்பவரது அச்சுந்தன்வயல் சைட்டிற்கு கம்பிகளை தோஸ்ட் வாகனத்தில் இன்ஜினியர் நாகர்ஜுன் எடுத்து செல்ல அனுமதித்து கையாடல் செய்யும் நோக்கத்தோடு விற்பனை செய்ய முயற்சித்துள்ளார். மேலும் மேற்படி எதிரியின் மீது குற்ற வழக்கு பதிவு செய்ய 17 (A) (1) ஊழல் தடுப்பு திருத்தச்சட்டம், 2018–ன்படி இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அவர்கள் Roc.No.V5/43925/2022 நாள்: 17.03.2025 பிரகாரம் அனுமதி பெறப்பட்டுள்ளது. ஆகவே, மேற்படி எதிரியின் மீது அரசுத்திட்ட பணிகளுக்காக வைக்கப்பட்டிருந்த அரசு சொத்தான சுமார் 2300 எடையுள்ள ரூ.43,700/– மதிப்புள்ள இரும்பு கம்பிகளுக்கான அரசுத்தொகையை கையாடல் செய்யும் நோக்கத்துடன் விற்பனை செய்ய முயற்சி செய்தமைக்காக அவர் மீது ஊழல் தடுப்பு திருத்தச்சட்டம் 2018 சட்டப்பிரிவு 15 r/w 13 (1) (a) r/w 13 (2)–ன்படி வழக்குப்பதிவு செய்யப்படுகிறது. இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் அசலை தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம் / சிறப்பு நீதிமன்றம், இராமநாதபுரம் மாவட்டம் அவர்களுக்கு அனுப்பியும், மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

19/06/2025

காவல் ஆய்வாளர்
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு,
இராமநாதபுரம்.